தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1981 ஏப்ரல், 10

பங்குனி 28ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு''

செய்யும் செயல் வேறாகவும் சொல்வது வேறாகவும் இருப்பாரது நட்பு ஒருவருக்கு கனவினும் துன்பத்தைத் தரும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

நடுநிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரியும் தொழிலாசிரியர்கள்.

*வினா எண். 728— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:-

நடுநிலைப் பள்ளியில் பணிபுரியும் தொழிலாசிரியர்களின் சம்பளத்தை உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் தொழிலாசிரியர்களின் சம்பளத்துக்கு சமமாக உயர்த்தும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: இப் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். இந்தக் கல்வி மானியம் வருவதற்குள்ளாக இந்தப் பரிசீலனை முடிந்துவிடுமா? ஒரு மாதம் கழித்தாலும் அந்தப் பரிசீலனையில் ஒரு நல்ல முடிவாக எடுத்து விரைவிலே அதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதனுடைய முழு விவரத்தையும் பரிசீலித்ததற்குப் பிறகு பதில் சொல்லக்கூடிய நிலைமையிலேதான் நான் இருக்கிறேன். இப்போது திட்டவட்டமாக ஒன்றும் சொல்வதற்கில்லை. இருந்தாலும் நாம் ஆசிரியர் பிரச்சினைகளை என்றைக்கும் அனுதாபத்தோடு கவனிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, எல்லா பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்களையும் முழு நேர ஆசிரியர்களாக மாற்றியமைத்து முழு ஊதியம் வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஒரே தகுதியுள்ளவர்கள் நடுநிலைப் பள்ளிகளிலேயும் உயர்நிலைப் பள்ளிகளிலேயும் ஒரே மாதிரியான வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அந்தக் கோரிக்கையை அவர்கள் கிளப்பியிருக்கிறார்கள். அது எப்படி பொருந்தி வரும் என்று பார்த்து சரியாக இருக்குமானால் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக கொள்ளக்கூடிய நிலைமை இருக்கும். இல்லையென்றால் மறுகக வேண்டியிருக்கும். அதுதான் பரிசிலனைக் கட்டத்திலே இருக்கிறது.

திரு. எஸ். இராசாராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளிலே பார்ட் டைம் ஆசிரியர்களாக இருக்கின்றவர்களை முழு நேர ஆசிரியர்களாக வேலை செய்வதற்கு அனுமதியளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. அதைக் கொஞ்சம் கொஞ்சமாக பார்த்து முழு நேர ஆசிரியர்களாக மாற்றுகிற முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளிலே பகுதிநேர ஆசிரியர்களாக தமிழ்நாட்டிலே மொத்தம் எத்தனை பேர்கள் வேலை செய்கிறார்கள்? அவர்களுக்கு மாதச் சம்பளம் 100க்கும் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே, அதை வைத்துக்கொண்டு அவர்கள் எப்படி குடும்பம் நடத்தமுடியும்? ஆகவே உடனடியாக முழு நேர ஆசிரியர்களாக நியமித்து முழுச் சம்பளம் கொடுக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: முழு விவரங்கள் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும். இருந்தாலும் பகுதி நேர ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக ஆக்குகிற முயற்சியை கொஞ்சம் கொஞ்சமாக நாம் எடுத்து வருகிறோம்.

1981 ஏப்ரல் 10]

திரு. எல். இளையபெருமாள்: கல்வி அமைச்சர் சொல்கிற போது தொழில் ஆசிரியர்கள் பள்ளிகளிலே வேலைசெய்கிறவர்கள் சில பேர்கள் வேலையை விட்டுவிட்டார்கள், காரணம் போதிய மாணவர்கள் இல்லை என்பது. அந்த ஒரே காரணத்தினால் வேலையை விட்டுவிட்ட ஆசிரியர்களைப்பற்றி பரிசீலனை செய்து அவர்களுக்கு வேறு இடத்தில் வேலை கொடுக்க முயற்சி செய்வார்களா? அது சம்பந்தமாக ஆசிரியர்கள் சங்கத்திட மிருந்து தகவல் வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. அப்படி வேலையை யாராவது இழந்திருப் பார்களேயானால் தனிப்பட்டு கோரிக்கைகளை விண்ணப்பங்களை எழுதித் தந்தால் அதுகுறித்து பரிசீலித்துத் தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

பூம்புகார் பகுதியில் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் ஆய்வு

*வினா எண்-729 திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் பகுதியில் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் அண்மையில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மத்திய தொல் பொருள்ஆய்வுத்துறை 1962–63ஆம் ஆண்டிலிருந்து அகழ்வா ராய்ச்சி நடத்தியுள்ளது. கடைசியாக1978ல் இத்தகைய ஆய்வு நடத்தப்பட்டது. ஆனால் அண்மையில் எதுவும் நடத்தவில்லை.

(ஆ) அகழ்வாராய்ச்சியின் மூலம் புத்தவிகாரம், யூரலி படகுத்துறை, ரோமானிய பானை, ஏடுகள், பல வண்ண மணைகள், செங்கல் மேடை போன்ற பல தொல்பொருள்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் பூம்புகார் அல்லாமல் வேறு எங்கேயாவது ஆய்வு செய்யப்பட்டதா? அவைகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பணிகள் என்ன என்பதை அறிவிக்க இயலுமா?